## பெண் வெற்றி பெறும் போது, சமூகம் வெற்றி காண்கிறது

*அதுல் கேஷப் - இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான அமெரிக்கத் தூதுவர்*

சர்வதே மகளிர் தினம் என்பது 100 வருடங்களிற்கு முன்னர் தொழிலில் பெண்களின் பங்களிப்பை கௌரவிப்பதையும், அரசியல் உரிமைகளை முன்னிறுத்துவதையும், பணியிடங்களில் பாரபட்சம் மற்றும் ஒடுக்குமுறையை முடிவிற்கு கொண்டு வருவதையும் நோக்கமாக கொண்டு வருடாந்த பாரம்பரியமாக ஆரம்பமானது.இந்த விடயத்தில் பெண்கள் ஏற்படுத்தியுள்ள முன்னேற்றங்கள் குறித்து சிந்திப்பதற்கும், மாற்றங்களை கோருவதற்கும், நாடுகளிலும் தங்கள் சமூகங்களிலும் தமது துணிச்சல் மற்றும் மன உறுதி காரணமாக மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் பெண்களை வாழ்த்துவதற்கும், பாராட்டுவதற்கும் பெண்களின் வெற்றியை உறுதி செய்வதற்கான முயற்சிகளை தூண்டுவதற்கும் ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 8ஆம் திகதி உலகெங்கிலும் உள்ள மக்கள் அணி திரள்கின்றனர். உலக நாடுகள் அனைத்திலும் பெண்கள் வெற்றிப் பெறும் போது, முழுச் சமூகமுமே வெற்றி காண்கின்றது. சிறுமியரும், பெண்களும் கல்வி கற்கும் போது, ஒட்டுமொத்தச் சமூகமும் கற்ற சமூகமாக மாறுகின்றது.

நாங்கள் இந்த பெண்களின் உரிமைகளை பாராட்டிக் கொண்டாடும், அவர்களது வலுப்படுத்தலுக்காக உழைக்கும் அதேவேளை அவர்கள் வழியில் குறுக்கிடும் பெரும் தடைகளையும் நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. பால்நிலை என்பது எப்போதும் எங்கள் அனைவரிற்கும் கிடைக்ககூடிய வாய்ப்புகளை பாதிக்கின்றது. வீட்டுப் பணிகளிலிருந்து, கல்வி முதல் தொழில் வரை பெண்கள் தாங்கள் முன்னேறிச் செல்வதில் சமூக தடைகளையும், ஸ்தாபன ரீதியிலான முட்டுக்கட்டைகளையும் எதிர்கொள்கின்றனர்.

வீட்டிலோ அல்லது பணியிடத்திலோ அனைத்து நபர்களும், ஆண்களும் பெண்களும் - பெண்களிற்கு அதிகளவு வாய்ப்புகளை வழங்கும் விதத்தில் செயற்படுவது அவசியமானது. இளம் வயதில் நொபெல் விருது வென்ற மலாலா யூசுப் ''எங்களில் அரைவாசிப்பேர் தடுக்கப்படும் போது எங்கள் அனைவராலும் வெற்றிபெற முடியாது'' எனக் குறிப்பிடுகின்றார். மனிதர்களில் அரைவாசிப் பேரின் வெற்றியை உறுதி செய்வதற்கு, கணவன்மார், தந்தையர், சகோதரர்கள் மற்றும் மகன்களுக்கும், பெண்கள் தமது முழு ஆற்றலை எட்டுவதற்கான அவர்களது உரிமைசார் மற்றும் முழுமையான சந்தர்ப்பத்தை தேடும் பெண் உறவுகளுக்கு ஆதரவளிக்க வேண்டிய கடமை உள்ளது.

அது முற்றிலும் உண்மையே. பெண்கள் எந்த பொருளாதாரத்திலும் சாத்தியமான மனித மூலதனத்தில் அரைவாசியாக காணப்படுகின்ற நிலையில், பெண்களை முறைசார் பொருளாதாரச் செயற்பாடுகளிலிருந்து தவிர்ப்பது குறைந்தளவு வருமான மட்டத்திற்கும் அதிகளவு வறுமைக்கும் வழி வகுக்கின்றது, சர்வதே நாணய நிதியத்தின் புள்ளிவிபரங்களின் பிரகாரம் தொழில் புரிவதில் பெண்கள் எதிர்கொள்ளும் சட்டரீதியிலான முட்டுக்கட்டைகள் காரணமாக உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 30 வீத இழப்பு ஏற்படுகின்றது. பெண்கள் ஆண்களிற்கு சமமாக பங்களிப்பு செய்தால் 2025இற்குள் உலகின் வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 28 திரில்லியன் டொலர்களை (அமெரிக்கா மற்றும் சீனாவின் தற்போதைய மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் பார்க்க அதிகம்) சேர்த்துக் கொள்ள முடியும் என மக்கின்சே மதிப்பிடுகின்றார்.

இது குறித்து சிந்தியுங்கள்: சமத்துவத்திற்காக 28 திரில்லியன் டொலர்கள். 2016ம் ஆண்டு மகளிர் தினத்திற்கான கருப்பொருள் "சம அந்தஸ்திற்கான உறுதிமொழி" என அமைந்திருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை.

இலங்கைக்கான புள்ளிவிபரங்கள் பொருளாதார ரீதியில் செயலற்று இருப்பவர்களின் எண்ணிக்கையில் பெண்கள் 69 வீதம் என்பதையும், பொருளாதார ரீதியில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் பெண்கள் 34 வீதம் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளன. இந்த பயன்படுத்தப்படாத வளங்களை, தொழில் முனைவை, புத்தாக்கத்தை மற்றும்

வேலைவாய்ப்பினை நாட்டின் அபிவிருத்திக்காக பயன்படுத்தலாம், அதேவேளை தனிநபரை வலுப்படுத்துவதுடன் சமூகத்திற்கும் நன்மை கிடைப்பதை உறுதி செய்யலாம். பெருமளவு பெண்களை முதலில் ஊழியர்களாக கவர்வதும், அதேவேளை அவர்களை தொழில் முனைவோர்களாகவும், தொழில் வழங்குநர்களாகவும் ஊக்குவிப்பது பொருளாதார வளர்ச்சியில் மாற்றத்தை ஏற்படுத்தும். புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும். குடும்பத்தினரின் வாழ்க்கை தராதரத்தினையும் அதிகரிக்கும்.

உலகின் உயிர்துடிப்பு மிக்க தனித்துவமான பெண்கள் தலைமையிலான வர்த்தகங்களின் இருப்பிடமாக அமெரிக்கா உள்ளது. மேலும், அபிவிருத்தி தந்திரோபாயத்தின் ஒரு பகுதியாக இலங்கையில் பெண் தொழில் முனைவோரிற்கு பல தசாப்தங்களாக அமெரிக்கா ஆதரவு அளித்து வந்துள்ளது. எங்கள் திட்டங்கள் பெண்களை விவசாயம் மற்றும் சிறுகைத்தொழில்களில் தொழில் முனைவோர்களாக மாறுவதற்கான பயிற்சிகளை வழங்கியுள்ளன, கடன்களை பெறுவதற்கான உதவிகளை வழங்கியுள்ளன. மேலும் தங்கள் சந்தைகளை விஸ்தரிப்பதற்கு சமூக வர்த்தக வலையமைப்புகளை உருவாக்க உதவியுள்ளன. நாங்கள் திறமை வாய்ந்த வர்த்தகத் தலைவர்களை புதிய எண்ணங்களை அறிந்துகொள்வதற்கும் பகிர்ந்துகொள்வதற்கும் அமெரிக்காவிற்கு அனுப்புகின்றோம். பின்னர் அந்த முன்மாதிரிகளை இலங்கைக்கு திரும்பியதும் ஏனையவர்களிற்கும் வழங்குமாறு ஊக்குவிக்கின்றோம். அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிலையத்தின் ஊடாக பொருளாதார ரீதியில் பின்தங்கிய, மோதல் இடம்பெற்ற, பெருமளவு பெண்கள் தலைமை வகிக்கும் குடும்பங்களை கொண்ட பிரதேசங்களில் உள்ளூர் வர்த்தகங்களை புதிய தொழிற்சாலைகளை அமைக்குமாறு நாங்கள் ஊக்குவிக்கின்றோம்.

வட பகுதிக்கும் மத்திய மாகாணத்திற்கும் இடையில் நீங்கள் எப்போதாவது ஏ9 வீதியில் செல்வீர்கள் என்றால் வன்னியில் மாங்குளத்தில் உள்ள யுஎஸ்எயிட் ஆதரவுடனான டேஸ்ட் ஓவ் வன்னி என்ற ஓய்வெடுப்பதற்கான கடையில் ஒரு முறை நில்லுங்கள். கிராமிய அபிவிருத்தி சமூகத்தினால் நடத்தப்படும் இக்கடை யுத்தத்தினால் வாழ்க்கைத் துணையை இழந்தவர்கள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களிற்கு உணவு குளிர்பானங்கள், அப்பகுதியின் கைத்தறிபொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்வதன் மூலம் வாழ்வாதாரத்திற்காக உழைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. உள்ளூர் பெண்கள் நாளாந்தம் ரூ. 43,000 வரை உழைக்கின்றனர். இலாபத்தை தங்களிற்குள் பிரித்துக்கொள்கின்றனர். அதனை தமது பிள்ளைகளை கற்பிப்பதற்கும், உணவு வழங்குவதற்கும் பயன்படுத்துகின்றனர்.

கிளிநொச்சி வீதியில் யுஎஸ்எயிட் ஆதரவுடனான சிவனருள் தொழிற்பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையம், வாழ்க்கைத் துணையை இழந்த பெண்கள், உறவுகளை இழந்தவர்கள், மாற்றுத் திறனாளிகள் அல்லது பெண்கள் தலைமை தாங்கும் குடும்பத்தினர் தங்கள் தயாரிப்புகளை விற்பனை செய்கின்றனர். இது வெறுமனே வர்த்தகமல்ல. பெண்களிற்கு வருமானத்திற்கான வழியினையும், பாதுகாப்பான தங்குமிடங்களையும் வழங்குதவன் மூலம் சமூகத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு அர்ப்பணிப்பாகும்.

கிழக்கு மாகாணத்தில் லியார்க் இன்டஸ்ரீஸ் சிறிய அளவிலான பாதணி மற்றும் கைப்பைகளை தயாரிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்தது, யுஎஸ்எயிட்டின் உதவியுடன் பின்னர் தனது உற்பத்திகளை விஸ்தரிப்பதற்காக சிறிய தொழிற்சாலையை ஆரம்பித்தது. குறிப்பிட்டளவு வேலைவாய்ப்பையே கொண்டிருந்த அந்த பகுதி பெண்களிற்கு புதிய வேலைவாய்ப்புக்களை வழங்கியது. ஊதியத்தை நேரடியாக வங்கிகளில் வைப்புச் செய்வதன் மூலம் இந்த நிறுவனம் சேமிப்பையும் ஊக்குவித்து வருகின்றது.

சனத்தொகையின் 40 வீதத்திற்கும் அதிகமானவர்கள் நாளொன்றிற்கு ரூ 225இற்கு குறைவான வருமானத்தையே பெறுகின்றனர் என உலக வங்கி புள்ளிவிபரங்கள் தெரிவிக்கும் நாட்டில் தங்கள் வாழ்வாதாரத்தை கொண்டு நடத்துவதற்கு பலத்த சிரமங்களை எதிர்கொள்ளும் பெண்களிற்கு உதவுவதில் அமெரிக்கா தனது அபிவிருத்தி திட்டத்திலும், பொருளதாரார உதவிகளிலும் கவனம் செலுத்துகின்றது. இந்த பெண்களை பொறுத்தவரை இது பணம்

தொடர்பான விடயம் மாத்திரமல்ல. இது வேலைக்கு செல்வதன் பெறுமதி. புதிய நண்பர்களை உருவாக்குதல், கடினமான தருணங்களில் ஒருவருக்கொருவர் ஊக்குவித்தல், குடும்ப மற்றும் சமூக தீர்மானங்களில் குரல்கொடுப்பதற்கான உரிமையை பெறுதல் ஆகியவற்றுடன் தொடர்புள்ளதாகவும், தமது பிள்ளைகளின் கல்விக்கு, பராமரிப்புக்குத் தேவையான பணத்தை ஈட்டுவதற்கானதாகவும் இது காணப்படுகின்றது.

2014ஆம் ஆற்றிய உரையொன்றில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, "நாடொன்று பெண்களை எவ்வாறு நடத்துகின்றது என்பதில் இருந்து அந்த நாடு எவ்வாறு இருக்கின்றது என்பதனை உங்களால் அளவிட முடியும். பெண்கள் தனியானவர்கள் என்பதனைப் போன்று சிலர் இன்றும் பெண்களின் விடணங்கள் குறித்து கதைக்கின்றனர். அது அர்த்தமற்றது. பெண் வெற்றி பெறும் போது, அமெரிக்கா வெற்றி பெறுகின்றது. அது மிகவும் நேரிடையான கருத்து" எனத் தெரிவித்தார்.

பெண்களும், சிறுமியரும் தமது முழுமையான ஆற்றலை அடைவதற்கு வலுவூட்டப்படும் போதுதான் உலகமானது தமது முழு ஆற்றலையும் அடைய முடியும். உண்மையில், பெண்கள் வெற்றி காணும் போது, எல்லாச் சமூகங்களும் வெற்றி காணும்.

# # #



**படவிளக்கம்:** உள்ளூர் பெண்களால் நடத்தப்படும் ஓய்வு உணவு விடுதி. வட மாகாணத்தில் யுத்தத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. யுத்தத்தால் வாழ்க்கைத் துணையை இழந்தவர்கள் வாழ்வாதாரத்தைப் பெறவும், வருமானம் பெறவும், தமது திறமைகளை வெளிக்காட்டவும் இந்த இடம் சந்தர்ப்பம் அளிக்கின்றது.



**படவிளக்கம்:** சிவனருள் என்பது யுஎஸ்எயிட் ஆதரவளிக்கப்பட்ட அரிசி மா உற்பத்தி மற்றும் பொதியிடல் சமூகத் தொழிற்கூடமாகும். கிளிநொச்சியில் அமைந்துள்ள பெண்களுக்கு வருமானத்தையும், வருமானப் பாதுகாப்பையும் அது வழங்குகின்றது.



**படவிளக்கம்:** அமெரிக்க உதவியுடன், கிழக்கு மாகாணத்தில் லியார்க் இன்டஸ்றீஸ் புதிய தொழிற்சாலையை திறந்துள்ளதுடன், மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார சந்தர்ப்பங்களை கொண்டுள்ள இளம் பெண்களுக்கு புதிய தொழில்வாய்ப்புக்களை வழங்கியுள்ளது.